# பிரான்சு மாநிலத் தேர்தலில் இரு தமிழர்கள் போட்டி





எதிர்வரும் மார்ச் 14ம் திகதி பிரான்சு நாடு தழுவிய மாநிலத் தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் Seine Saint Denis 93 மாநிலத்தில் இரண்டு தமிழர்கள் பசுமைக் கட்சியின் வேட்பாளராக போட்டியிடுகின்றனர். il -de -france போட்டியிடும் Cécile Duflot அவர்களும், Seine -saint -Denis 93 மாநிலத்தில் போட்டியிடும் Stéphane Gatignon (இவர் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து கடந்து வந்த ஆட்சிக்காலத்தில் பல்வேறு வகையான உதவிகளை புரிந்து வரும் செவரோன் மாநகர முதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது) தமது பசுமைக்கட்சியின் தேர்தல் கொள்கை விளக்கக் ஒன்றுகூடலினை செவ ரோன் மாநகரத்தில் நடாத்தியிருந் தனர். இக்கூட்டத்தில் பசுமைக்கட் சியின் தலைவர், DanielCohn-Bendit மற்றும் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர். இக்கூட்டத்தினை ஏற்பாடு செய்த மாநகர முதல்வர் அவர்கள் இங்கு இந்தியர்கள், தமிழ்நாட்டு மக்கள், தமிழீழத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து வருவதையும் அவர்களின் தேவைகள், உரிமைகளையும், அவர்களின் குரலின் ஊடாக பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் இப்பசுமைப்புரட்சியின் முக்கிய நோக்கம் உலகத்தின் சுற்றுப்புறச்சூழல் மாசடைதலும், உலகம் வெப்பமடைதல் ஆதலால் வருங்காலத்தில் கடல்மட்டத்திற்கு கீழ் உள்ள நாடுகள் பாதிகப்படப் போவதையும், இல்லாமல் போகும் சூழ்நிலை அபாயம் ஏற்படும் என்றும் அதற்கான தமது முன்னெடுப்புகளுக்கும், தமது நோக்கத்தை நிறைவேற்ற பலத்த ஆரவை தாம் பெற்றுவருவதாகவும் அதனை இத்தேர்தலில் தமது கட்சிக்கும் அதன் போட்டியாளர்களும் வாக்களித்து வெற்றியடையச்செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டதுடன், Ile de Franceக்கு மக்களின் போக்குவரத்திற்கான சலுகைகள், அடிப்படைத் தேவையானவைகளை இன்னும் அதிகம் வழங்குதல் அதில் 2 இலட்சம் பேருக்கு வீடமைத்து கொடுத்தல், 1 இலட்சத்து 70 ஆயிரம் பேருக்கு தொழில்வாய்ப்பு அளித்தல் முக்கியமான விடயங்களாக கூறப்பட்டன.







இக்கூட்டத்திற்கு தமிழ் மக்களும் அழைக்கப்பட்டிருந்தனர். அதற்கு மதிப்பளித்து தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். தமிழ் மக்களுக்கு உதவவேண்டிய விடயம் கதைக்கப்பட்டதுடன், அதற்கு வழியேற்படுத்தி கொடுக்குமுகமாக இரண்டு தமிழர்கள் Seine Saint Denis 93 பிரதேசத்தில் போட்டியிடவுள்ளனர். இவர்கள் மருத்துவக்கல்லூரி மாணவியும், பிரான்சு தமிழீழ மக்கள் பேரவையின் செயலாளரும், சர்வதேசப் பேச் சாளருமான செல்வி.கிருசாந்தி (சாளினி) சக்திதாசன் அவர்களும், Seine Denis மாநகரசபை ஆலேசகராக 2007 தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட செல்வன் முருகநாதபிள்ளை ரவிசங்கர் ஆகிய இருவரும் தேர்தலில் நிற்கின்றனர்.

## மீண்டும் கொழும்பில் மிதக்கும் சடலங்கள்!





செய்தி பக்கம் 6 இல்

## மறக்க முடியுமா..?







எங்கள் கண் முன்னாலேயே சிதைக்கப்பட்ட எங்கள் உறவுகள் இவர்கள். ஆண், பெண், குழந்தை பெரியவர் என்ற எந்த வயது வேறுபாடுகளுமின்றி தமிழர்கள் என்பதற்காகவே இவர்கள் மீது இத்தனை கொடூரம் நிகழ்த்தப்பட்டது. உலகமே கூடிநின்று வேடிக்கை பார்க்க, உலக நாடுகளின் ஆயுதங்களைக்கொண்டே இவர்கள் சிதைத்தழித்தது சிறீலங்கா பேரினவாதம். உலகம் முழுதும் அவர்களின் உறவுகள் என்று வாழ்கின்றோம், இவர்களுக்கு எந்த நீதியை வாங்கிக்கொடுக்கப் போகின்றோம்..?